# அறவழி

## NONVIOLENCE

வெளியீடு
அறவழிப்
போராட்டக் குழு
அஞ்சல் பெட்டி எண்: 2
சாவகச்சேரி

அறம் 1 மாதஇதழ் ✻ 1986 ஐப்பசி பக்கம் 10 ✻ விலை 2-00 வழி 6


### தமிழ் இனத்தின்

# சாதியத்துக்கு சாவுமணி அடிப்போம்!

தமிழ் இனம் முன் எப்போதும் இல்லாதவாறு இன்று தனது விடுதலைக்காகப் பல்வேறு வழிகளிலும் தியாக வேள்வி நடாத்தி வருகின்றது. இப்போராட்ட வேளையிலும் தமிழ் மக்கள் மத்தியில் கொடிய சமூக வியாதியாகவுள்ள ''சாதீயம்'' பேசி தமிழ் இனத்தின் ஒரு பகுதி மக்களை 'சாதீயம்' காரணமாக மனித உரிமை அற்றவர்களாக்க் கருதி நடத்துவது முழுத்தமிழ் இனத்திற்குமே அவமானத் தினையும் இகழ்வினையும் ஏற்படுத்துகின்ற மனித அநாகரிகச் செயலாகும்.

எனவே, தமிழ் சமுதாயத்தின் முன்னேற்றம் கருதி எம்பிரதேசத்தில் பொதுவணக்கத்துக்காகத் திறந்துவிடப்படாமல் இருக்கின்ற சகல இந்து கிறீஸ்தவ ஆலயங்களையும் பொது வழிபாட்டுக்கு அனுமதிக்குமாறும், பொதுக் கிணறுகள் நன்னீர்க்கிணறுகளில் சாதியின் பேரால் தண்ணீர் அள்ளவிடாத நிலையினை உடன் மாற்றிக்கொள்ளுமாறும், அடிமை குடிமை முறைகளை இனியாவது தவிர்த்துக் கொள்ளும்படியும் அறவழி பொது வேண்டுகோள் விடுக்கின்றது.



சர்வதேச கல்வியூட்டல் தினத்தன்று அறவழி பணிமனையில் நடாத்தப்பட்ட கையொப்பம் வைக்கும் பயிற்சியினை, சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. தங்கராசா ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும், கையொப்பம் வைக்கத்தெரியாத பெண்களுக்கு அறவழித் தொண்டர்கள் பயிற்சி அளிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

**✻ சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்க ✻**

# அறநோக்கில்

## சமூக சேவையாளர்கள்

எமது சமுதாயத்தில் அங்கும் இங்குமாக முழுநேர சமூகசேவைப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் தொகை மிகவும் குறைவு. சமூகசேவைக்கென்றே தம்மை முழுமையாக அர்ப்பணித்து—மக்கள் சேவையே மகேசன் சேவையாக வாழ்ந்து வருபவர்கள்பற்றி எமது சமுதாயம் போதியளவு அக்கறையோ அன்றி ஆர்வமோ காட்டாமல் இருந்து வருகின்றது என்றுதான் கொள்ளவேண்டியுள்ளது.

சமூகசேவையாளர்கள் — மக்களின் நன்மை—முன்னேற்றம் கருதி உழைப்பவர்கள். மக்கள் படும் துன்பங்களேயோ அன்றித் துயரங்களேயோ பார்த்துக்கொண்டிருக்க இவர்களின் சேவை மனம் பொறுக்காது. தம்மை மறந்து—தம் குடும்பத்தை மறந்து தம் கஷ்டங்களே மறந்து மக்களுக்காக, நேர காலம் பார்க்காது சேவையாற்றுபவர்கள்.

ஆனல், சமுதாய வாழ்வில் சமூகசேவையாளர்கள் எதிர்நோக்குகின்ற இடர்கள்—துன்பங்கள்—தடைகள்—பிரச்சனைகள் முரண்பாடுகள்பற்றி எம்மவர்கள் சிறிதேனும் அக்கறையோ அன்றி ஆர்வமோ காட்டிப் புரிந்துகொள்ளாமல் இருப்பது—இருந்து வருவது வேதனைக்குரியதாகும்.

சமூகசேவையாளர்களது வாழ்க்கையும் எழுத்தாளர்களது வாழ்க்கையும் பெரும்பாலும் ஒரே தன்மையானது எனலாம். சமூகசேவையாளர்களது தனிப்பட்ட வாழ்க்கையை ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது அங்கே வறுமை—குடும்ப கஷ்டம் நிதிக்கஷ்டம்—வசதியின்மை போன்றவை தென்படும்.

சமூகப்பணிகள் ஆற்றும் சேவையாளர்களே எம் சமுதாயம் அவ்வளவாக மதிப்பதில்லை. போற்றுவதில்லை—ஊக்குவிப்பதில்லை—பதிலாக அவர்களுக்குக் கிடைக்கும் புகழாரம்—ஏச்சு—பேச்சு—சொல்அடி—அவமானம்தான்.

இந்த நிலை முற்றாக மாற்றப்பட்டு—சமூகசேவையாளர்கள் சமுதாயத்தில்—போற்றப்படவேண்டும் — திக்கப்படவேண்டும்—அவர்களின் சேவைகளை ஊக்குவிக்கவும் வேண்டும் என அறவழி பெரிதும் விரும்புகிறது.

சமூகசேவையாளர்களைக் கிராமம் கிராமமாக, இனங்கண்டு அவர்களை ஒன்று திரட்டி ஸ்தாபனமயப்படுத்தி, அவர்களது நலன்களைப் பேணுவது—அவர்களது லட்சியம் ஈடேறவும் அவர்களது கஷ்ட—நஷ்டங்களை, புரிந்துணர்வு அடிப்படையில் நீக்கிக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமானதாகும் என்பதை அறவழி சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

## காந்தி அஞ்சலி

கடமையாற்றும் மாந்தரோடு
காந்தியிருக்கிறர்—அவர்
களனி திருத்தும் உழவரோடு களித்து
மகிழ்கிறர்
உடைமை யாவும் பொதுமை என்று
கேட்டுச் சிரிக்கின்றர்—இந்த
உலகம் என்றகோழை மனசை
உடைக்கச் சொல்லுகிறர்.
எளிமை, அன்பு, அகிம்சை, பொறுமை
காந்தி சொல்வது;—அதில்
இனிமையான வாழ்வுக்காக நம்மை
அமைப்பது
வழமை பொங்கும் பாரதத்தில் காந்தி
அண்ணலின்
உயர்வாழ்வுக்காக எழுந்து நின்று
வாழ்ந்து காட்டுவோம்.

## நீ! மருந்தா? அல்லது வியாதியா?

உனது ஆத்மாவின் ஒலிக்கு நீ செவி சாய்த்தால், புதிய சிந்தனைகள் ஊற்றெடுக்க ஆரம்பிக்கும். இந்தச் சிந்தனைகள் புதிய சமுதாயத்துடன் உனக்கு ஒரு தொடர்பினை ஏற்படுத்தும்.

நீ யார் என்பதோ எங்கிருக்கிறய் என்பதோ பிரச்சனை அல்ல. உன்னுள்ளே இருக்கும் தெய்வீகக்குரல் சரியான தேவையான வழிகளைக் காட்டும்.

இந்தப் புதிய ஒலியால் மனித சுபாவம் மாற்றமடையும். மனித சுபாவத்தின் மாற்றத்தால் புதிய மனிதர், புதிய சமுதாயம் புதிய உலகம் உருவாகும் அழுகிப்போன காய்கறிகளைக்கொண்டு நல்ல உணவைத் தயாரிக்கமுடியாது. அதுபோல, தீய மனிதர்களைக் கொண்டு புதிய சமுதாயத்தை உருவாக்கமுடியாது. நீ சமுதாயத்தின் வியாதியைத்தீர்க்கும் மருந்தா? அல்லது வியாதியா?

# விடுதலைப்போராட்டத்தில் இணையாது

## இளைஞர் வெளிநாட்டுக்கு ஓடிச்செல்வது வெட்கக்கேடு!

''வெகுஜனப்போராட்டத்திற்கு வித்திட்ட மகாத்மா காந்தியின் புனித பாதங்கள் மிதித்த மண்ணில் பிறந்த தமிழ் இளைஞர்கள், தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டம் எதிலும் இணைந்து கொள்ளாது வெளிநாடுகளுக்கு ஓடிச்செல்வது வெட்கக் கேடான விடயமாகும்.''

''மகாத்மா காந்தி வெள்ளையரிடம் இருந்துமட்டும் விடுதலை பெற்றுக்கொடுக்கவில்லை! இந்திய மக்களிடம் இருந்த குறைபாடுகளையும் அகற்றி அவற்றில் இருந்தும் விடுதலை பெற்றுக்கொடுத்தார்! அதே போல தமிழ்மக்களாகிய நாமும் எம்மத்தியில் இருக்கக்கூடிய சாதி, சீதனம், சுரண்டல் என்பவற்றை ஒழித்து ஒருவெகுஜனப் போராட்டம் நடாத்தவேண்டும்.''

இவ்வாறு தந்தை செல்வா அறங்காவல் குழுவின் தலைவரும். பழுத்த காந்தியவாதியுமான ''அறநெறிக்காவலர்'' பேராசிரியர் கு. தேசையா. யாழ். வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற காந்தி ஜயந்தி தினக்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசும் போது கூறினர்.

பேராசிரியர் ''நந்தி'' பேசுகையில், ''தாய் மொழிக்கு இடமில்லாத நாடு தனக்குத் தேவை இல்லை என காந்தி கூறினர், காந்தி ஒரு பெரும் கல்விமான், எழுத்தாளன். அவரது ''சத்தியசோதனை''யை இன்றைய இளைஞர்கள் அனைவரும் படிக்க வேண்டும். வெறும் மேடைப்பேச்சுக்கள் மட்டும் எமது சமுதாயத்தினை முன்னேற்ற உதவாதது. திட்டமிட்ட செயற்பாடுகள்தான் எமது சமுதாயத்தினை உயர்ச்சியடையச் செய்யும்.

அறவழிப்போராட்டக்குழுவின் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் அங்கு உரையாற்றுகையில்,

''மகாத்மா காந்தியின் புனித பாதங்கள் மிதித்த பூமியில் நாம் இன்றும் காந்தியின் இறந்த தினத்தையும்—பிறந்த தினத்தையும் மாறி மாறிக் கொண்டாடுகின்றேமே ஒழிய, காந்திமகானின் கொள்கைகளையோ, வேலைத்திட்டங்களையோ திருப்திகரமான முறையில் முன்னெடுத்துச்செல்லவில்லை. காந்தியின் கொள்கைகள் சிந்தனைகளால், கவரப்பட்ட பல அன்பர்கள் இருந்தும்கூட, நல்ல காத்திரமான காந்தீய அமைப்பு எம் மத்தியிலே இல்லாமல் இருப்பது மிகவும் வேதனைப்படக்கூடியதொன்று. காந்தீய சிந்தனையுள்ளவர்கள் அன்பர்கள் அனைவரும் ஒரு ஸ்தாபனமாக இணைந்து காந்தீயப் பணிகளை மேற்கொண்டு, அவரது கனவுகளை நனவாக்கவேண்டும்'' என்ருர்.

கருத்தரங்கினை ஒழுங்கு செய்த யாழ், மாநகர சபையின் ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் நன்றி கூறினர்.

## புத்தரின் போதனைகளே???

1. கொல்லாதே! உயிரினை மதித்து ஒழுகுக.
2. களவு செய்யாதே. கொள்ளைஅடியாதே. தன் உழைப்பின் பயன்கட்கு உரியவனுமாறு எவனுக்கும் உதவிபுரிக.
3. அசுத்தத்தை விட்டொழித்து தூய வாழ்வைப் பற்றுக.
4. பொய் பேசாதே. உண்மையைக் கூறுக,அறிவோடும் அச்சமின்றியும் அன்புடைய நெஞ்சோடும் வாய்மையை உணர்த்திடுக.
5. பொய் வதந்திகளைப் புதிதாகப் புனையாதே! அவற்றைத் திரும்பக் கூருதே: பிறருடைய நல்லியல்புகளை நாடியறிக! அவர்களைப் பகைவர் பழிக்கின், நீ முழுமனதோடு அவர் கட்காகப் பரிந்து பேசும் வண்ணம் நல்லன நாடுக.
6. சூள் உரையேல்(ஆணையிடாதே): மரியாதையும் மதிப்பும் தோன்றப்பேசுக.
7. வம்புபேசிப் பொழுதைப் பாழ்படுத்தாதே! கருதிய ஒன்றையே கூறுக! ஆகாதாயின் வாய் திறவாதே.
8. பேராசை கொள்ளாதே, பொறுமையை ஒழி. பிறர் நலங்கண்டு பெருமகிழ்வெய்துக.
9. தீய நினைவொழிந்து நெஞ்சைத் தூயதாக்குக. நின் விரோதியர் மீதேனும் பகைமை கொள்ளேல். அனைத்துயிர்களையும் அன்பால் தழுவுக
10. அறியாமையினின்றும் உன் உள்ளத்தை விடுவித்துக்கொள்க. ஐயத்திற்கோ திரிபுக்கோ ஆளாகாத வண்ணம் சிறப்பாக உனக்கு வேண்டிய ஒன்றிலே உண்மையை அறிய ஆவலாயிரு.

# எச்சம் தரும் பொருள் மிச்சம்

நௌறு ஒரு நாடு. இறைமையும், தன்னுதிக்கமும் உள்ள குடியரசு. 18 கிலோ மீட்டர் சுற்றளவு. 2130 கெக்டெயர் பரப்பளவு. ஏறத்தாழ 10.000 மக்கள். நாடாளு மன்றத்தில் 18 உறுப்பினர்கள். பசிபிக் மாகடலின் தீவுகளில் ஒன்றுதான் நௌறு.

நௌறுக்கு வந்துபோகும் பறவைகள் அந்நாட்டின் செல்வங்கள். பறவைகள் கடலில் மீன்களை உண்ணுகின்றன. ஓய்வுக்கு நௌறுதீவுக்கு வருகின்றன. எச்சமிடுகின்றன. நௌறுத்தீவில் பறவை எச்சம் குவியலாக வளர்ந்துள்ளது; 200 அடி உயரத் திடலாக மாறியுள்ளது.

நாலுகோடி தொன் எடையிள்ள பறவை எச்சம் அத்தீவில் உண்டு. பறவை எச்சம் ஏற்றுமதியாகின்றது. இயற்கை உரமாகப் பயிர்கட்குப் பயன்படுத்த ஏற்றுமதியாகின்றது. நௌறு நாட்டின் பொருளாதாரமே பறவை எச்ச ஏற்றுமதியில்தான் அடங்கியுள்ளது.

பேருநாடு தென்அமெரிக்க மேற்குக் கரையோர நாடு. பேருநாட்டுப் பசுபிக் மாகடல் வளமான கடல். நெத்தலி மீன்கள் நிறைய உள்ள கடல். நெத்தலி மீன்களை நீர்க்காகங்கள் உண்ணுகின்றன. கரையில் வந்து எச்சமிடுகின்றன. பறவை எச்சம் மலையாகக் குவிந்துள்ளது. ஏராளமாக ஏற்றுமதியாகின்றது.

சோமாலியும் தெற்கு ஏமனும் அண்டை நாடுகள். செங்கடல் வாயினில், இந்துமா கடல் அருகில் இருநாடுளும் உள. இந்தக் கடலும் வளப்பம் பொருந்திய கடல். சாளை மீன்கள் ஏராளமாக உள்ள கடல். சாளை மீனை உண்ணும் பறவைகள் தெற்கு ஏமன் நாட்டில் இருக்கின்றன. எச்சம் மலையாகக் குவிந்து ஏற்றுமதியாகின்றது.

நைதரசனும், பொசுபரசும் உப்புகளாக நிறைந்த பறவை எச்சம் நல்லதோர் இயற்கை உரம். வெள்ளை நிறமான இந்த எச்சத்திலே நீர்மை குறைவு. கட்டியாகவே எச்சம் இடப்படுகின்றது. ஊரிக் அமிலக்கட்டிகள்தான் எச்சங்களாகின்றன. எச்சம் தரும் பொருள் பல நாடுகளில் மிச்சமாகப் பெறப்படுகின்றன.

—ஆதாரம் 'பறவைகளே'

---

# மன்னிக்கத் தீர்மானியுங்கள்

மன்னிக்கத் தீர்மானியுங்கள், மனக்கசப்பு எவ்வித நல்ல பலனையும் தராது. மனக்கசப்புகளும் வீணை ஆத்திரங்களும் தீமையையே தேடித்தரும். மன்னிக்கும் விடயத்தில் நீங்கள் முதல் ஆளாக நில்லுங்கள்.

புன்னகையை எந்த நேரமும் சுமந்து கொண்டு செல்லுங்கள். இதனுல் மகிழ்ச்சி மலர்வதை நீங்கள் காண்பீர்கள். இத்தகைய மகிழ்ச்சியை படரவிடுங்கள், மற்றவர்கள் மன்னிக்கும்வரை காத்துக்கொண்டிராமல் முதல் மன்னிப்பவர் நீங்களாக இருங்கள். மன்னிக்கும் மனுேபாவம் எத்தனையோ அபூர்வ விடயங்களை வாழ்க்கையில் சாதித்துவிடுகிறது, வாழ்க்கையை செம்மைப்படுத்தி சீர்ப்படுத்துகின்றது. அன்பின் மிக அழகான பண்பான வெளிப்பாடு மன்னிக்கும் மனப்பான்மை. இந்த மனப்பான்மையின் செயற்பாடு விபரிக்கமுடியாத அமைதியையும் சந்தோஷத்தையும் உங்களுக்குத் தேடித்தரும்.

இன்றைய உலகின் மிக்க அவசியத் தேவை மன்னிக்கும் மனப்பான்மை. எல்லாவற்றையும் மன்னித்துவிடுவது உங்களுக்கு நீங்களே தரும் நல்ல பரிசு.

அன்புள்ளத்தோடு நல்ல விடயங்களை மனதில் சேகரித்துக்கொண்டு தேவையற்றவற்றை மன்னித்துவிடுங்கள். உங்கள் சகோதரனுக்கும் உங்களுக்கும் மனச்சாந்தியைத் தராத மன்னிக்கும் தன்மை உண்மையில் பூரணத்துவம் பெற்றதாகக் கருதிவிடமுடியாது.

மன்னிக்கும் தன்மை நல்ல அமைதியை சமாதானத்தை தேடித்தருகிறது.

தவறு செய்வது மனிதத்தன்மை மன்னித்துவிடுவது தெய்வீகத்தன்மை என்றூர் அலெக்சாந்தர். மறப்போம் மன்னிப்போம் இதற்காகப் பிரார்த்தனை செய்வோம். என்றூர் தலைசிறந்த ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர்.

மன்னிக்கும் மனப்பான்மை நல்ல மன வளர்ச்சியினுல் ஏற்படுகின்றது.

நான் மற்றவர்களை மன்னித்துவிடும் போது எனது மனதில் நல்ல சாந்தி அமைதி

( 5ம் பக்கம் பார்க்க )

# மனேபாவம் மாறட்டும்

அமெரிக்கா, பெரிய பிரித்தானியா போன்ற நாடுகளில் யாருமே தொழிலில் உயர்வு தாழ்வு பார்ப்பதில்லை. கணிசமான நியாயமான ஊதியம் கிடைக்குமென்ருல் தாங்கள் கல்வி அல்லது அந்தஸ்து போன்றவற்வையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல் எந்த வேலையிலும் ஈடுபட அங்கே இளைஞர், யுவதிகள் தயாராக இருக்கிருர்கள்.

பெரிய கல்வித் தகுதியைப்பெற்ற பலர் தங்கள் கல்வித் தகுதிக்கேற்ற ஒரு உத்தியோகம் கிடைக்கும் வரை உணவகங்களில் உணவு பரிமாறுவோராகப் பணியாற்றுவதைப் பார்க்கலாம்.

நல்ல உயர் குடும்பத்துப்பெண்கள், தேவைப்படும் வீடுகளுக்குச் சென்று வீட்டினைச் சுத்தம் செய்வது—பாத்திரங்களைச் சுத்தம் செய்வது, குழந்தைகளைக் கவனிப்பது போன்ற பணிகளையும் செய்கின்றனர்.

அதிகமாகச் சம்பாதித்தால், அதிக அளவில் செலவிட்டு உல்லாசமாக, சுகமோடு காலம் கழிக்கலாம் என அவர்கள் நினைக்கிருர்கள்.

ஆகவே என்ன தொழில் செய்தாவது வருமானத்தைப் பெருக்கிக்கொள்வதில் அவர்களுக்கு ஆர்வமும் உற்சாகமும் இருக்கின்றது.

கோடீஸ்வரன் வீட்டுக் குழந்தைகளும்கூட, அவர்கள் சொந்தச் செலவுக்காகப் பாடசாலை செல்லும் நேரம்போக மற்ற நேரத்தில் பத்திரிகை விற்பனை செய்வது, நோயாளர்களைக் கவனிப்பது போன்ற பணிகளைச் செய்து ஊதியம்பெற முயற்சிக்கிருர்கள்.

நமது சமுதாயத்தில் தொழிலில் உயர்வு தாழ்வு பார்ப்பதும், ஊதியம், கௌரவம் குறைந்த தொழில்களைச் செய்வோரை இழிவாகப் பார்ப்பதும் நடாத்துவதும் இன்னமும் இருக்கின்றது.

சுமாரான வசதி படைத்த குடும்பத்தினர் கூடத் தங்கள் குழந்தைகள் வேலைசெய்ய முற்படுவதைக் கேவலம் என்று கருதுகின்ருர்கள்.

சின்ன வயதில் அவர்கள் மூளையில் திணிக்கப்படும் மனேபாவம், அவர்கள் பெரியவர்களான பிறகும் அப்படியே தொடர்ந்து நீடிக்கத் தொடங்கிவிடுகின்றது.

குழந்தைப்பருவத்தில் இருந்தே உழைக்கும் மனப்பான்மையில் ஒரு சுவையை ஏற்படுத்தவேண்டும்.

முறைகேடான, அல்லது சட்டவிரோதமான சமூக விரோத தொழில்களைப்பற்றித்தான் சிந்தையில் எண்ணக்கூடாதே தவிர, மற்றப்படி ஊதியம் கிடைக்கக்கூடிய தொழில்கள் அனைத்துமே உயர்ந்த தொழில்களே என்ற மனேபாவத்தைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்தவேண்டும்.

அப்பொழுதுதான் அவர்கள் பெரியவர்களான பிறகு, எதிர்பார்க்கும் வேலை கிடைக்கவில்லை என்பதற்காக ஓய்ந்து போய்ச் சோம்பலாக அமர்ந்திருக்க மாட்டார்கள்.

உடனடியாக என்ன வேலை கிடைக்குமோ அதனைக்கொண்டு நிம்மதியாகவும் மகிழ்ச்சியுடனும் காலத்தை ஓட்டுவார்கள்.

அப்போது வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பேச்சுக்கே இடமிருக்காது.

## பெரும்பணி எது?

''நமக்குச் சுதந்திரம் வேண்டும். ஆனல் மற்றென்றும் நமக்கு உடனடியாகத் தேவை. நம் நாட்டில் இருந்து வறுமையையும், துன்பத்தையும், பிணியையும் நாம் விரட்டி அடிக்கவேண்டும். நாட்டைப்பற்றியே சிந்திக்காமலும் நமது போராட்டத்தில் கலந்துகொள்ளாமலும் இருக்கும் மக்களின் மனத்தில் படிந்துவிட்ட ஒட்டடையை நாம் விலக்கியாகவேண்டும். அது பெரும்பணி. இதற்குக் காலதாமதமாகலாம். இருப்பினும் நாம் உடனடியாகச் செயலில் இறங்குவோம்.''

—நேருஜீ.

## மன்னிக்கத்......

( 4ம் பக்கத் தொடர்ச்சி )

கிடைக்கும். முன் எப்பொழுதும் ஏற்படாத சாந்தி கிடைக்கின்றது. நல்லெண்ணம் மனதில் வளரும்போது புதிய சக்தி, புதியதென்பு, புதிய தைரியம் நெஞ்சில் பிறக்கின்றன. பிறர் மீது அன்பு செலுத்த, பிறரை நேசிக்க இந்த மன்னிக்கும் மனப்பான்மை நமக்குப் பெரிதும் உதவுகின்றது.

நம்மிடம் ஒரு புதிய சக்தி இந்த மன்னிக்கும் மனேபாவத்தால் உள்ளூரப் பிறக்கின்றது. இதனை நாம் அனுபவரீதியில் அறிந்து கொள்ளலாம்.

ஒருவரை ஒருவர் மன்னித்துவிடுவதால் இருவருமே அமைதியுடன் நல்லதொரு அமைதியான சூழலில் வாழ வழி ஏற்படும்.

# அபிவிருத்திப்பணியில் மகளிர் பங்கு

நாடுகளின் முன்னேற்றத்துடன் மகளிர் சமூகத்தின் தளரா முன்னேற்றமும் இணைந்து காணப்படுகின்றது. இம்முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த எச்சக்திக்கும் பலமில்லை.

சமாதானத்திற்கு வலுவூட்டலிலும் சுபீட்சத்தை ஏற்படுத்துவதிலும் மகளிருக்குப் பெரும்பொறுப்புண்டு. தமது குடும்பங்களைப் பேணி தமது குழந்தைகளை நற்பிரஜைகளாக வளர்த்து அதன்மூலம் அவர்களுக்குச் சீரிய சிந்தனைகளை ஊட்டி வருங்கால சந்ததியினரைத் தகுந்த நெறியில் இட்டுச்சென்று முழுமானிட வர்க்கத்தினரையும் மேலோங்கச் செய்வதற்கு பெண்கள் வழிவகுக்கவேண்டும். இந்த வகையில் குடும்ப வாழ்க்கையில் மகளிருக்கு உள்ள இடம் அதிக முக்கியமானது.

பொருளாதார சமூகத்துறைகளில் மாற்றங்கள் ஏற்பட பெண்களது சமுதாய நிலைமையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. புராதன பிரபுத்துவசமுதாயத்தில் பெண் ஒருத்தி அடிமையாகவே வாழ்ந்து வந்தாள். இத்தகைய சமுதாயமுறை அழிந்து இன்றைய சமூக அமைப்பு ஏற்பட்டதுடன் பெண்கள் கணிசமான அளவு சுதந்திரம்பெற்றனர். குறிப்பாக சோவியத் ஒன்றியம் சீனு போன்ற சோஷலிச நாடுகளில் பெண்கள் பொருளாதாரச் சமூக சமத்துவத்தை ஈட்டிக்கொண்டனர். அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் பொருளாதார சமூகத்துறைகளில் முழுச்சுதந்திரம் பெற்ற நாடுகளிலும் பெண்கள் அரசியலில் மாத்திரமன்றி விஞ்ஞான், வைத்திய,' கைத்தொழில் துறைகளிலும் பெரு வளர்ச்சி அடைந்து உயர்பதவிகளை வகித்து சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் இந்த யுகத்தில் பெண்களாகிய நாம் மேற்கொள்ளும் சகல முயற்சிகளும் எமது நாட்டையும் அந்நிலைக்குக் கொணரும் வண்ணம் அமைத்தல் வேண்டும். உண்மையில் இந்த யுகத்தில் பெண்களின் முன்னேற்றத்தைத் தடைசெய்யக்கூடிய சக்தி எதுவுமே இல்லை!

1975ம் ஆண்டை ஐக்கியநாடுகள் தாபனம் சர்வதேச மகளிர் ஆண்டாக பிரகடனம் செய்துள்ளது. பெண்களது நாட்டு அபிவிருத்தி பற்றிய இன்றைய நிலை தொடர்பாக உலகின் கவனத்தை ஈர்ப்பதே இதன் நோக்கமாகும். சமத்துவம், அபிவிருத்தி, அமைதி என்பன சர்வதேச மகளிர் வருடத்தின் முக்கிய குறிக்கோளாக அமைகின்றன. உண்மையில் ஆண் பெண் சமத்துவம் என்பது ஐக்கியநாடுகள் சபையால் எப்போதோ வழங்கப்பட்டுவிட்டதென்றும் ஆனால் இவை உலகநாடுகளில் அமுல்செய்யப்பட்டனவா என்பது ஐயத்துக்குரியதொன்று.

நாட்டின் அபிவிருத்தித்துறையில் ஆணுக்குச் சரிநிகர் சமானமாக பெண்களும் விளங்குவதற்கு மேலும் பல வாய்ப்புகளைப் பெறச் சந்தர்ப்பம் ஏற்படுமெனவும் எதிர்பார்க்கலாம்.

## கிராமியக் கைப்பணிப் பொருட்காட்சி

கிராமிய கைப்பணிப் பொருட்காட்சி ஒன்றினை அறவழிப் போராட்டக்குழு மார்கழி மாத நடுப்பகுதியில் நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடாத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

இப்பொருட்காட்சியில் அறவழிக் கிராமங்களில் இயங்குகின்ற பாலர் பாடசாலைச் சிறுவர்கள், ஆசிரியைகள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களின் ஆக்கப்பொருள் சாதனங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

பாலர் பாடசாலைத் திட்டத்தினை மையப்படுத்தி நடாத்தப்படவிருக்கும் இக்கிராமியக் கைப்பணிப்பொருட்காட்சியில் கிராமிய வளங்கள், தேவைகள், மூலவளப் பயன்பாடு, கிராமிய அபிவிருத்திபோன்ற விடயங்களும் முக்கியத்துவம் பெறும் எனத் தெரியவருகின்றது.

## சிரமதானப்பணி

யாக்கரு கிராமத்தில் இருக்கும் பிரதான குளமாகவுள்ள ''தெடுத்தனை'' குளம் கடந்த மாதம் 8ம், 9ம், 10ம் திகதிகளில் சிரமதானமூலம் ஆழமாக்கப்பட்டது.

இச்சிரமதானப் பணியில் தெடுத்தனை சன சமூக நிலையத்தொண்டர்களும் யாக்கரு அறவழிப் பாலர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தொண்டர்களும் பங்குகொண்டனர்.

ஊற்று நிறுவனத்தின் உதவியுடன் இக்குளம் மேலும் ஆழமாக்கப்படும் என நிலைய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

## தீபாவளி வாழ்த்து

தமிழர் திருநாளாகிய தீபாவளி—அல்லறும்
தமிழ் சமுதாயத்திற்கு
நிரந்தரமான விடிவையும்
நிலையான சமாதானத்தையும்
நல்லதோர் எதிர்காலத்தையும்
நல்கவேண்டுமென
நலமுடன் பிரார்த்திக்கொள்கிறது—அறவழி

# காந்தியக் கல்விமுறை ...

( சென்றவாரத் தொடர்ச்சி )

தாய்மொழியே பிரதான மொழியாக ஆரம்பக் கல்வி தொடங்கப்படவேண்டுமென்பதை வலியுறுத்தும் காந்தி, ஆங்கிலம் இலக்கியம் கற்பதை எதிர்க்கவில்லை. ஆனல் பண்பாட்டு கலாச்சார ஊடுருவலைத் தடுக்கவேண்டும் என்பதில் பிடிவாதமாயிருந்தார்.

உயர்கல்விக்குத் தன் திட்டத்தில் முக்கியத்துதுவம் கொடுக்காவிடினும், உயர்கல்வி நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென்றும். பல்வேறு கலைகளையும் ஒருகிணைக்கும் நிலையமாகப் பல்கலைக்கழகம் திகழவேண்டுமென்றும், தன்னிறைவான தாயுமிருக்கவேண்டுமென்ருர்.

பெண்கள் கல்வியைப் பற்றிக்கூட மகாத்மா மறந்துவிடவில்லை. இவர்களுக்கும் ஒரு ஒழுக்கான கல்விமுறை இருக்கவேண்டுமென்றும் அவர்களின் பங்களிப்பும் முக்கியம் எனக்கொள்ளும் அதே வேளையில், வரையறைகளையும் கூறி வைக்கத் தவறவில்லை.

இந்தியாவிலே மிகப் பிரபல்யமான டாக்டர் கோத்தாரியின் கல்விக்குழு ஆதாரக் கல்வித் திட்டத்தை ஆராய்ந்தபோது, இம்முறையின் அடிப்டைக் கருத்துக்கள், கல்வியின் எல்லா நிலையிலுமே ஊடுருவிச் செயற்படவேண்டிய அவசியத்தையும் எல்வா மாணவர்களுக்கும் வேலை அனுபவம் அளிக்கப்படவேண்டியதன் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்டிருக்கின்றனர்

காந்தியடிகளின் காலத்தில் வாழ்ந்து அவர் தத்துவத்தையும் கல்வி முறைகளையும் இலங்கையில் ஊடுருவச் செய்த பெரியோர்களில் திரு. ஹண்டி பேரின்பநாயகம், திரு. ஏ. ஈ. தம்பர், திரு. இராஜரட்னம் முக்கியத்துவம் பெறுவர்.

காந்தி காட்டிய கல்விநெறி இன்று உலகின் ஏனைய நாடுகளிலும் பரவுகின்றது, எமது நாட்டின் தொழில் முன்னிலைப் பாடநெறியும், ஒருங்கிணைந்த பாடமுறையும் ஆதாரக் கல்வித்திட்டத்தை ஓரளவு ஒத்திருக்கின்றன.

காந்தியன் கல்வி முறையைப்பற்றிச் சுருக்கமாக ஆய்வுரை நடத்திய ஒவ்வொரு கணமும் ஆராய்ந்த ஒவ்வொரு அம்சத்திலும் அவருக்கும் இவருக்கும் பல ஒத்துமைகளைக் காணக்கூடியதாயிருந்தது.

தோற்றத்திலும் சிந்தனையிலும் மட்டுமல்ல, இலட்சியங்களிலும், சொல்லவேண்டியதை, சொல்லுகின்ற பொருத்தமான சமயத்தில் சொல்லவேண்டிய வர்களுக்குச் சொல்வதிலும் வாழ்க்கை முறையிலும் இவ்வொற்றுமையைக் காணலாம்.

டெல்கியில் 1960ம் ஆண்டு நடைபெற்ற 10ம் உலக மகாநாட்டில், கவ்வியுலகுக்குக் காந்தியின் பங்களிப்ப என்ற விடயத்தைப்பற்றி ஆய்வு நடத்தி உரையாற்றுகையில், காந்தியுடன் சேர்ந்து வாழ்ந்து அவர் தத்துவத்தில் ஊறியிருந்த திரு. ஜீ. இராமச்சந்திரன் அவர்கள் கைப்பணி மூலம் கல்வி என்பதைப் படிப்படியாக ஆராய்ந்ததை விமர்சித்துப் பேசிய திரு. நேசையா அவர்கள். கூறிய மூன்று திருத்தங்களையும் திரு. இராமச்சந்திரன் அவர்கள் இருதடவை பாராட்டியிருப்பது அவதானிக்கப்படவேண்டிய அம்சமாகும்.

அவரில் கண்ட நாட்டுப்பற்று, அந்த உணர்வு கல்விமூலம் எதையும் சாதிக்கலாம் என்ற பிடிவாதமான நம்பிக்கையை நாம் இருவரிடமும் காணலாம்.

"வாழ்க்கையின் ஆயத்தம் கல்வியிலேயே தங்கியுள்ளதாயின், வாழ்க்கை முறைகள் கல்வி முறைகளிலும் பிரதி பலிக்கவேண்டும்.'' (வளரும்)

## குழந்தைத்தனமான காரியங்கள்

- ★ குழந்தைகளின் வன்முறை நடவடிக்கைகள்
- ★ குழந்தைகள் சொல்லும் பொய்கள்
- ★ குழந்தைகள் காணும் சுகமான கனவுகள்
- ★ குழந்தைகள் ஈடுபடும் சிறிய திருட்டுத்தனங்கள்
- ★ குருந்தைகளிடம் தோன்றிடும் பொறுமை

ஆகிய அனைத்துமே குழந்தை வளர்ச்சியின் சில கட்டங்களே தவிர, அவை குழந்தைகளின் பிற்கால வாழ்வை நிர்ணயிக்கும் நிரந்தரமான அடையாளங்களல்ல. ஆகவே இந்தக் காரியங்களை எல்லாம் குழந்தைத் தனமான காரியங்கள் என்கிற முடிவுடன் நாம் அனுதாபத்துடன் அணுகி, அவைகளின் வளர்ச்சிக்குத் துணை நின்ருல். குழந்தைகள் மிக ஆரோக்கியமாக வளர்ந்து பெரியவர்களாகி சமூகப் பொறுப்புணர்ச்சியுடன் செயல்படுவார்கள்.

## அரச வன்முறையால் பாதிக்கப்படுபவர்களுக்கு உதவி

இராணுவ முகாம்களில் இருந்து ஏவப்படும் ஷெல் தாக்குதல், குண்டுவீச்சு, துப்பாக்கிச் சூடு போன்றவற்றினல் பாதிப்புக்குள்ளாகி யாழ்ப்பாணம், மந்திகை வைத்திய மனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களுக்கு அறவழிப் போராட்டக்குழு உடனுக்குடன் பால் மாவகைகள், குளுக்கோஸ் மற்றும் அவசர மருந்து வகைகளையும் அன்பளிப்பாக அளித்து வருகின்றது.

குழுவின் தொண்டர்களும், தொடர்பாளர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# செய்திச் சிதறல்

☐ வெலிக்கடைச் சிறைச்சாலை, பூஸா தடுப்பு முகாம் போன்ற இடங்களில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட தமிழ் இளைஞர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக அறவழிப் போராட்டக்குழு அக்டோபர் 3ம் திகதி சாவகச்சேரி சந்தை மைதானத்தில் ஓர் உண்ணாவிரதத்தினை நடாத்தியது.

☐ திருகோணமலையில் உள்ள சாம்பல்தீவு, சல்லி ஆகிய இரண்டு கிராமங்களில் நான்கு நாட்கள் தொடர்ந்து குண்டுமாரி பொழியப்பட்டது. நூற்றுக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

☐ வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, பருத்தித்துறை இராணுவ முகாம்களுக்கு மேலதிக சிப்பாய்கள் ஹெலிகொப்டர்கள்மூலம் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளனர்.

☐ மாதாந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு ஒன்றினை இம்மாதத்தில் இருந்து தமிழீழ இராணுவம் நடாத்துகின்றது.

☐ ஆலங்கேணி, தம்பலகாமம் பகுதிகளிலுள்ள அகதி முகாம்களில் பெரியளவில் உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இங்குள்ள தமிழ் அகதிகள் பலர் இதனால் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

☐ யாழ் மாவட்டத்தில் விதை வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது.

☐ வயாவிளான் சந்திக்கருகாமையில் அமைந்திருந்த நிலையான பல வீடுகள் குண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

☐ மட்டக்களப்பு படுவான்கரைப்பகுதியில் ஆயுதப்படையினரின் நடவடிக்கைகளினால் 11 பாடசாலைகள் இயங்கமுடியாமல் இருக்கின்றன.

☐ அண்மைக்கால நிகழ்வுகளினால் தற்சமயம் தமிழ் பிரதேசங்களில் சிரங்கு நோய் மிக வேகமாகப் பரவிவருகின்றது.

☐ தமிழீழத்துக்கான பண நோட்டுக்கள் 1987ம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களின் புழக்கத்துக்கு விடுவதாக தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு அறிவித்துள்ளது.

☐ வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிரந்தர அமைதி ஏற்படவேண்டும் என்றால், தமிழ்ப் போராளித் தலைவர்களுடன் இலங்கை அரசு பேசவேண்டும் என களுத்துறை மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. ஹேமா ஜெயவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

☐ வடபகுதிக்கான ரயில்சேவையை யாழ்ப்பாணம் வரை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

☐ தலவாக்கொல்லை ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் திரு. என். பத்மநாதன் (46வயது) அவரது தங்கும் விடுதியில் ஒரு கோஷ்டியினால் அடித்துக்கொல்லப்பட்டார்.

☐ கொழும்பில் புடைவைக்கடை ஒன்றில் வேலை செய்யும் தமிழ் ஊழியர் ஒருவர் உள்ளூர் அரசியல்வாதியினால் நையப்புடைக்கப்பட்டார்.

☐ இராணுவத்துடன் தொடர்புகள் வைத்ததாகக் கூறி கிளிநொச்சியில் கணவன்—மனைவி இருவருக்கு மின்கம்ப மரணதண்டனை வழங்கப்பட்டது.

## காந்தியின் வாக்கு

★ அன்பையும் சகிப்புத்தன்மையையும், ஆண்களைவிட பெண்களிடத்திலிருந்து அதிகம் எதிர்பார்க்கிறேன்.

★ தைரியம் ஆணின் ஏகபோகமல்ல. ஆணைப்போல் தனக்கும் சுதந்திரம் உண்டு என்பதைப் பெண்ணும் உணரவேண்டும்.

★ இவ்வுலகில் நாம் இயல்பான சாந்தியைப் பெற விரும்பினால், குழந்தைப் பருவத்திலேயே அதற்கான செயலைத் தொடங்கவேண்டும்.

★ பிரார்த்தனையுடன் தொடங்கும் முயற்சி ஒருபோதும் வீண் போகாது. அம்முயற்சிதான் மனிதனின் வெற்றி. பலன் கடவுளின் கையில் இருக்கின்றது.

★ எங்கே ஏழைகளுக்காக ஊக்கத்துடன் நற்செயலாற்றும் அன்பு இருக்கிறதோ அங்கே கடவுள் இருக்கிறார்.

★ கள்ளுக்கடைகள் சகிக்கமுடியாத சாபக்கேடு.

★ நற்கல்வியை நிலைநாட்ட ஒருவனின் வாழ்க்கை மாசற்றதாக இருக்கவேண்டும் என்பது இன்றியமையாதது.

★ பணம் திரட்டுவதில் உனது ஆற்றலை செலவு செய்யாமல் உனது நாட்டிற்காகச் சேவை செய்.

★ காரிருளையும் ஒரு சிறு விளக்கு அகற்றிவிடும்.

★ பசித்துப் புசி, உன் உணவுக்காக நீயே உழைக்க வேண்டும்.

## காந்தியின் சாத்வீகக் கொள்கைக்கு கைகொடுத்தவை

சாத்வீக உணர்வு அண்ணல் மகாத்மா காந்தியின் சிறுவயதினிலேயே ஊறிப்போய்விட்டது. அண்ணல் மகாத்மா காந்தியின் அறவழி கொள்கைபற்றி ''பற்டோக்'' என்பவர் காந்தியை நேரில் கேட்டபோது காந்தி கூறியது.

''நான் குழந்தையாக இருந்தபோது பாடசாலையில் கற்ற ''குஜராத்'' பாடலில் ஒன்று என் மனதினிலே எப்போதும் இருந்து வந்தது. அதன் கருத்து யாதெனில் ''தாகத்திற்கு நீர் கொடுத்தவருக்கு நீ திரும்ப நீர் கொடுத்துவிடுவதில் பெரிது எதுவும் இல்லை. ஆனால் தீமை செய்தவருக்கு நன்மை செய்வதிலேயே உண்மைப்பெருமை உண்டு. இந்தக் குஜராத்தி பாடல் என் சிறுவயதில் எனக்கு பெரியதோர் திருப்பத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல் ''பைபிளில்', நியாயமான உண்மை சித்தாந்தமும் எனக்கு விருப்பை உண்டாக்கியதோடு சாத்வீக எதிர்ப்பின் மேன்மையையும் உணரும்படி செய்தது,

உபதேசத்தில் தலைவனாக இருப்பவனை எதிர்க்காதே. உன்னை யாராவது வலது கன்னத்தில் அறைந்தால் இடது கன்னத்தையும் திருப்பிக்காட்டு என்று கூறி இருப்பதையும், உன்னுடைய விரோதிகளிடமும் அன்பு செலுத்து. உன்னை துன்புறுத்துவர்களும் பரலோகத்தில் இருக்கும் உன் பிதாவின் மக்களாக வேண்டும் என்று சொல்லிருப்பதும், அத்தோடு பகவ கீதையும், டால்ஷ்டாயின் உன்னுள் இருக்கும் கடவுளின் ராஜ்யம் என்ற நூலும் உதவியது என்று அண்ணல் காந்தியடிகள் தனது உரையில் கூறுகிறார். மேற்கூறியவைகளே காந்தியின் சாத்வீக கொள்கை பின்பற்றலுக்கு கை கொடுத்தவையாகும்.

கனக ஞானசுந்தரம்,
வட அல்வையம்பதி.

## மூலிகைச்சந்தை ஆரம்பம்

சர்வதேச சமாதான சேவை இயக்கம் சாவகச்சேரி ஆயுள்வேத மூலிகைச்சந்தை ஒன்றினை ஆரம்பித்துள்ளது. இச்சந்தை ஒவ்வொரு மாதத்திலும் கடைசிச் சனிக்கிழமையில் நடைபெறும்;

முதல் சந்தை செப்தம்பர் மாதம் 27ம் திகதி சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வைபவத்திவ், திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திருமதி சரோஜினி கணேந்திரன், பீடாதிபதி டாக்டர் எஸ். பவானி, உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா, லயன்ஸ் கழக தலைவர் டாக்டர் பே. பிலிப்ஸ் உட்பட பல முக்கியஸ்தர்கள் பங்கு கொண்டிருந்தனர்,

இலங்கையிலேயே மூலிகைச்சந்தை முதல்முதலாக சாவகச்சேரியில்தான் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

# சிந்தனைக்கு பத்து

''சிந்தனைப்பத்து'' எனும் புதிய பகுதியை இவ் இதழ் முதல் ஆரம்பித்துள்ளோம். இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் அறவழி வாசகர்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைமட்டும் தபால் அட்டையில் எழுதி, தமது பெயர் முகவரியுடன் இங்கே கொடுக்கப்பட்டுள்ள முகவரியை வெட்டி ஒட்டி 15-11-86க்கு முன் அனுப்பவேண்டுகின்றோம்.

இம்முகவரி ஒட்டப்படாத விடைகள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

போட்டியில் வெற்றிபெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளுக்குரிய பரிசில்களை அறவழி வழங்கும்; இதழ் 6 போட்டியின் முடிவுகள் அறவழி இதழ் 7ல் பிரசுரமாகும்.

### வினாக்கள்

1, பார்வையற்றோருக்கான பிரெயில் எழுத்து முறையை ஆரம்பித்தவர் யார்?

2. காந்தியின் இலட்சியத்தை பிரதிபலிக்கும் சேவாக் கிராமம் இந்தியாவின் எந்த மாநிலத்தில் உள்ளது?

3. யப்பானியர்களால் மறக்கமுடியாத தினம் 06—18—1945. எப்படி?

4. ஐக்கியநாடுகள் சபை எப்போது உதயமாகியது?

5. கைதடியில் ஆயுள்வேத மூலிகைத்தோட்ட நிர்மாண பணியில் ஈடுபட்டிருக்கும் ஸ்தாபனம்எது?

6. யாழ் குடா நாட்டில் இன்று புழக்கத்தில் இருக்கும் தபால் தலையின் பெறுமதி என்ன?

7. தமிழ் பிரதேசத்தில் தலைமையகத்தைக்கொண்டு பல்வேறு பாலர் பாடசாலைகளை சிறந்த முறையில் நடாத்தி வரும் ஸ்தாபனம் யாது?

8. மறவன்புலவு, கெற்பேலி குடியேற்ற திட்டங்கள் யாருக்காக அமைக்கப்பட்டவை?

9. தமிழ்பிரதேசத்தில் தலைமையகத்தை கொண்டு இயங்கும் கூட்டுத்தாபனத்தின் பெயர் என்ன?

10. தேம்பாவணி எனும் காப்பியம் எந்த சமயத்தை தழுவியது?

முகவரி

சிந்தனைக்கு பத்து இல. I
த. பெ. இல. 2.
சாவகச்சேரி.

# இலங்கையிடம் சர்வதேச மனித உரிமை நிறுவனம் கேட்கும் 5 கேள்விகள்

சுவீடன் நாட்டினைத் தலைமையகமாகக் கொண்டுள்ள ''சமாதானத்துக்கான நீண்ட பயணம்'' எனும் சர்வதேச மனித உரிமை, சமாதான நிறுவனம், இலங்கை அரசாங்கத்திடம் மிக முக்கியமான ஐந்து கேள்விகளை நேரடியாகக் கேட்டுப் பதிலைப் பெறுமுகமாக இம்மாத இறுதியில் கொழும்பு வருகின்றது.

இச்சமாதானக் குழு இதுவரை 22 நாடுகளுக்கு விஜயம் செய்து, சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசாங்கங்களிடம் இந்த ஐந்து கேள்விகளையும் கேட்டுள்ளதுடன், அவற்றுக்கான பதில்களையும் பெற்றுள்ளனர். பெரும்பாலான நாடுகள் இதுவரை உடன்பாடான பதில்களையே அளித்துள்ளன எனவும் தெரியவந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்திடம் கேட்கப்படும் அதி முக்கியமான ஐந்து கேள்விகள் இதோ:—

- ☐ உங்களுடைய நாட்டின் பாதுகாப்புப் படைகள் நாட்டின் எல்லைக்கு அப்பால் செல்வதை விரும்புகின்றீர்களா?
- ☐ உங்களுடைய நாட்டில் இருந்து ஆயுதங்களையும் ஏனைய போர்க்கருவிகளையும் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய விரும்புகின்றீர்களா?
- ☐ பயங்கர ஆயுதங்கள் உங்கள் நாட்டிற்குள் புழக்கத்தில் இருப்பதை வரவேற்பீர்களா?
- ☐ உலகில் வாழும் மக்கள் அனைவரும் சுத்தமான நீரும், உணவும், சுகாதார வசதிகளும், கல்வியும் பெறுவதற்கு ஏனைய நாடுகள் மேற்கொள்ளும் கூட்டு முயற்சிகளில் உங்களுடைய பங்களிப்பையும் வழங்குவீர்களா?
- ☐ எதிர்காலத்தில் ஏற்படும் பிணக்குகளை சமாதானமான முறையில் தீர்த்துக்கொள்வீர்களா? அல்லது பயமுறுத்தல் மூலமோ, இராணுவ நடவடிக்கைகளின் மூலமே தீர்ப்பதற்கு முயற்சிப்பீர்களா?

இவ்ஐந்து கேள்விகளுக்கும் இலங்கை அரசாங்கம் எவ்வாறான பதில்களை அளிக்கும் என சர்வதேச மட்டத்திலான மனித உரிமைகள், சமாதான இயக்கங்கள் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக்கொள்ளும் என உணரக்கூடியதாகவுள்ளது.

சர்வதேச சமாதான ஆண்டு தொடர்பாகவே இக்குறித்த பணி, இவ்அமைப்பினால் ஏற்படுத்தப்பட்டதாகும்.

## சித்திரவதைமூலம் இனவிடிவைத் தடுத்துவிடமுடியாது

இந்நாட்டில் தமிழ் இனம் புறக்கணிக்கப்பட்டு வருவதற்கு சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் மீதான அரசின் நடவடிக்கைகளே ஓர் எடுத்துக் காட்டு.

இத்தமிழ் இளைஞர்களின் மரணக் குரலுக்கு செவிசாயுங்கள். பூஸாவில் இடம் பெறும் சித்திரவதைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வையுங்கள். அவர்களின் மரணக்குரலுக்கு தமிழ் மண்ணில் இருந்து நீதி கேட்டு நிற்கின்றனர். அதற்கு நீதி வழங்க தயங்குவது ஏன்?

இந்த நாட்டில் சித்ரைவதைகளாலோ ஒடுக்கு முறைகளாலோ ஒரு இனத்தின் விடிவைத் தடுத்து நிறுத்த முடியாது.

இவ்வாறு மகர சிறையில் பயங்கர வாதத் தடைச்சட்டத்தினால் சிறையில் இருக்கும் சிங்கள சகோதரன் திரு. ஹென்றி பெரேரா இலங்கை ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை அறவழிப் போராட்டக் குழுவினால், யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1986 ஐப்பசி 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.